# கட்டுரைப் பூக்கள்

## தரம் 3



ஆக்கம் :

திருமதி. யசோதா பாஸ்கரன்

R·T R·T

R·T

அறநெறிப் பாடசாலை
R·T
பதிவு இல. HA/7/56/14/174
அருள்மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

R·T

R·T R·T

அறநெறிப் பாடசாலை
அதிபர்
பதிவு இல. HA/7/56/14/174
ஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## தரம் 3

# கட்டுரைப் பூக்கள்

# 50

- மூன்றாந் தரத்தில் கற்கும் மாணவர்களின் எழுத்தாற்றலையும் மொழி அறிவையும் விருத்தி செய்யும் வகையில் ஆக்கப்பெற்ற கட்டுரைத் தொகுப்பு.
- பழமொழிகள், விடுகதைகள் அடங்கியது.

ஆக்கம்:

**திருமதி யசோதா பாஸ்கரன்**

**நிலா பதிப்பகம்,**

**70/1 வைமன் வீதி, யாழ்ப்பாணம்.**

விலை: 70/-

## நூல் விபரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கட்டுரைப்பூக்கள் |
| நூலாசிரியர் | : | திருமதி யசோதா பாஸ்கரன் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2003. |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கு, |
| வெளியீடு | : | நிலா பதிப்பகம்,<br>70/1 வைமன் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| விற்பனையாளர் | : | லங்கா புத்தகசாலை,<br>F.L. 1-14. டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு - 12.<br>T.P: 2341942 |
| அச்சிட்டோர் | : | பேர்பெக்ற் பிறின்ரேஸ்,<br>130, டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு - 12. |
| விலை | : | 70/= |

# பதிப்புரை

கட்டுரை எழுதுதல் சிறுவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கும் மொழித்திறன் விருத்திக்கும் தக்க பயிற்சியாகும். சொற்களை ஒழுங்குபடுத்திச் சிந்தித்துக் கட்டுக் கோப்பான முறையில் வாக்கியங்களை ஆக்கும் ஆற்றலைச் சிறுவர்கள் இளமைமுதல் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்ற முதுமொழிக்கேற்ப இளமையில் இருந்தே இத்திறன் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சிறுவர்களின் மொழி ஆற்றலை நன்முறையில் வளர்த்தெடுக்கும் பொறுப்பு ஆசிரியர், பெற்றோர் அனைவரையும் சார்ந்துள்ளது. இப்பெரும் பணியை இலகுவாக்குவதற்கு மாதிரிக் கட்டுரைகள் பெருந்துணை புரியவல்லன.

கட்டுரைப் பூக்கள் என்னும் இந்நூல் 50 மாதிரிக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. மூன்றாந்தரத்தில் கற்கும் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றைக் கருத்திற் கொண்டு ஆக்கப் பெற்றது.

சிறுவர்களுக்கான பல்வேறு நூல்களைப் படைத்துள்ள திருமதி யசோதா பாஸ்கரன் இந்நூலை ஆக்கியுள்ளார். சிறுவர் உலகின் நன்மதிப்பைப் பெற்ற அன்னாரின் இந்நூல் மூன்றாந் தரத்தில் கற்கும் மாணவர்களுக்குப் பெரும் பயன் நல்குமெனக் கருதுகிறேன். மாணவர்களும் ஆசிரியப் பெருந்தகைகளும் பெற்றோரும் இந்நூலை உவந்தேற்றுப் பயன் கொள்வரென எதிர்பார்க்கிறேன். நன்றி.

- பதிப்பாளர்.

# உள்ளடக்கம்


1. நான் ........................................ 1
2. எனது அம்மா ........................ 2
3. எனது அப்பா ........................ 3
4. எனது வீடு ........................... 4
5. எனது பாட்டி ........................ 5
6. எனது பாடசாலை ................ 6
7. எனது ஆசிரியை ................. 7
8. எனது நண்பி ........................ 8
9. எனது வகுப்பறை ................ 9
10. எமது நாடு ........................10
11. கோழி ...................................11
12. பசு .........................................12
13. ஆடு .......................................13
14. கிளி .......................................14
15. காகம் .....................................15
16. நாய் ......................................16
17. வண்ணத்துப்பூச்சி ...............17
18. மயில் .....................................18
19. யானை ....................................19
20. மழை .....................................20
21. பூக்கள் ..................................21
22. மரங்கள் ................................22
23. பழங்கள் ................................23
24. வீட்டுத்தோட்டம் ..................24
25. செய்தித்தாள் .......................25
26. வானொலி ..............................26
27. தொலைக்காட்சி ....................27
28. பள்ளி செல்வோம் ..............28
29. உடற்பயிற்சி ........................29
30. சுப்பிரமணிய பாரதியார் ....30
31. திருக்குறள் .........................31
32. ஔவைப்பாட்டி .....................32
33. சுத்தம் பேணுவோம் ...........33
34. பழமொழிகள் .......................34
35. வாழை (சுயசரிதை) ...........35
36. சுவாமி விபுலாநந்தர் .........37
37. நத்தார்ப் பண்டிகை ...........38
38. நீர் ...........................................39
39. சோமசுந்தரப்புலவர் ...........41
41. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் ..............42
41. தியாகத்திருநாள் ...............43
42. ஆறுமுகநாவலர் .................45
43. வீதி விதிகள் .......................46
44. மின்னுவதெல்லாம் பொன் அல்ல. ....................................47
45. உறவு முறைக்கடிதம் ........48
46. சுற்றுலா ..............................49
47. கலாநிதி டி. பி. ஜாயா .....50
48. நண்டின் ஆசை ....................51
49. தாடி அறுந்த வேடன் ........53
50. உண்மையான கருணை ...54
51. பழமொழிகள் .......................55
52. விடுகதைகள் .......................58

# 1. நான்



- எனது பெயர் நித்தியா மனோகரன்.
- எனது வயது எட்டு.
- நான் தரம் மூன்றில் படிக்கிறேன்.
- எனது பாடசாலையின் பெயர் ஆம்பலூர் விவேகானந்தா வித்தியாலயம்.
- எனது தம்பியின் பெயர் உதயன்.
- நான் வகுப்பில் முதலாவது பிள்ளையாக வருவேன்.
- நான் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வேன்.
- நான் தினந்தோறும் கடவுளை வணங்குவேன்.
- நான் அப்பா, அம்மா சொற்படி நடப்பேன்.
- நான் பெரியோரை மதிப்பேன்.

# 2. எனது அம்மா




- எனது அம்மாவின் பெயர் சாரதா.
- அம்மா எனக்கு நல்ல உணவுகள் தருவார்.
- புதிய உடைகள் தைத்துத் தருவார்.
- வீட்டில் பாடம் சொல்லித் தருவார்.
- எனது அம்மா மிகவும் நல்லவர்.
- நான் அம்மாவின் செல்லப்பிள்ளை.
- அம்மா என்னைக் கோவிலுக்குக் கூட்டிச் செல்வார்.

# 3. எனது அப்பா



- எனது அப்பாவின் பெயர் சிவநாதன்.
- அவர் மிகவும் நல்லவர்.
- அப்பா என்னைத் தினமும் பாடசாலைக்குக் கூட்டிச் செல்வார்.
- விடுமுறை தினங்களில் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வார்.
- அப்பா எனக்கு நிறையப் பொருட்கள் வாங்கித் தருவார்.
- எனக்கு அப்பா மீது நல்ல விருப்பம்.

# 4. எனது வீடு




- எனது வீடு அழகானது.
- எனது வீடு பெரிய வீடு.
- எனது வீடு நல்லூரில் இருக்கிறது.
- எனது வீட்டில் நான்கு அறைகள் உண்டு.
- எனது வீட்டின் முன்னால் சிறிய வீட்டுத் தோட்டம் உண்டு.
- அதில் அழகான பூக்கள் உண்டு.
- எனது வீடு ஒரு சிறிய மாளிகை போல் இருக்கும்.

# 5. எனது பாட்டி




- ❐ எனது பாட்டியின் பெயர் கனகாம்பிகை.
- ❐ எனது பாட்டிக்கு எழுபது வயது.
- ❐ அவர் மிகவும் நல்லவர்.
- ❐ அவர் எனக்கு நல்ல கதைகளும் பாடல்களும் சொல்லித் தருவார்.
- ❐ பாட்டி என்னைச் செல்லமாகக் 'குட்டி' என்று அழைப்பார்.
- ❐ பாட்டிக்கு என்மேல் நல்ல விருப்பம.

# 6. எனது பாடசாலை



- எனது பாடசாலையின் பெயர் நாவலர் மகா வித்தியாலயம்.
- எனது பாடசாலையில் முதலாம் வகுப்புத் தொடக்கம் பதின்மூன்றாம் வகுப்பு வரை உள்ளது.
- இங்கு ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள்.
- எனது பாடசாலைக்குப் பெரிய விளையாட்டு மைதானம் உண்டு.
- எமது விளையாட்டுப் போட்டிகள் இம் மைதானத்தில் நடைபெறும்.
- எனது பாடசாலையில் நூலகம் இருக்கிறது.
- நூலகத்தில் நல்ல நூல்கள் பல இருக்கின்றன.

# 7. எனது ஆசிரியை





- எனது ஆசிரியையின் பெயர் திருமதி. வனிதா சந்திரன்.
- எனது ஆசிரியை மிகவும் நல்லவர்.
- அவர் எல்லாருடனும் அன்பாகப் பழகுவார்.
- எனது ஆசிரியை நன்றாகப் படிப்பிப்பார்.
- அவர் எங்களுக்கு நல்ல கதைகளும் பாடல்களும் சொல்லித் தருவார்.
- எமது ஆசிரியையை நாம் மிகவும் விரும்புகிறோம்.

# 8. எனது நண்பி



- எனது நண்பியின் பெயர் நந்தினி.
- நானும் நந்தினியும் மூன்றாம் வகுப்பில் படிக்கிறோம்.
- நந்தினி அழகாக இருப்பாள்.
- அவள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரி.
- நாம் இருவரும் சேர்ந்தே பாடசாலை செல்வோம்.
- மாலை நேரங்களில் இருவரும் சேர்ந்து விளையாடுவோம்.
- நந்தினிக்கு என்மீது நல்ல விருப்பம்.

# 9. எனது வகுப்பறை




- எனது வகுப்பறை மிகவும் பெரியது.
- எனது பாடசாலையின் இரண்டாவது மாடிக் கட்டடத்தில் இது இருக்கிறது.
- எனது வகுப்பறையில் மாணவர்களின் கைப்பணிப் பொருட்கள் தொங்குகின்றன.
- வகுப்பறையில் உள்ள கதிரைகளுக்கும் மேசைகளுக்கும் வர்ணப் பூச்சு பூசப்பட்டுள்ளது.
- நாம் வகுப்பறையைத் தினமும் கூட்டித் துப்புரவு செய்வோம்.
- எனது வகுப்பில் முப்பந்தைந்து பிள்ளைகள் உள்ளனர்.

# 10. எமது நாடு




- இலங்கை நாடு எம் நாடு.
- இதுவே எங்கள் தாய் நாடு.
- இது இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்தள்ள ஒரு தீவாகும்.
- இதனை ஸ்ரீலங்கா, ஈழம், இரத்தின துவீபம், தப்பிரபேன், செரண்டிப், சிலோன் எனப் பல பெயர்களால் அழைப்பர்.
- இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் எனப் பல இனத்தவர் வாழ்கின்றனர்.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளைப் பேசுவோர் இங்குள்ளனர்.
- பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தோர் இங்கு உள்ளனர்.
- எமது நாடு இயற்கை வளங்கள் பல கொண்டது.
- இலங்கையில் உயர்ந்த மலைகள் பல உள்ளன.
- ஆறுகள், வாவிகள், குளங்கள் பல உள்ளன.
- நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் கடல்வளம் கொண்டதாக விளங்குகின்றது.
- இலங்கையில் பல புனித தலங்கள் உள்ளன.
- இலங்கை இந்து சமுத்திரத்தின் முத்து எனப் போற்றப்படுகின்றது.

# 11. கோழி



- கோழி ஒரு வீட்டுப் பறவை.
- கோழி முட்டை இடும்.
- கோழி தானியங்களைப் பொறுக்கி உண்ணும்.
- கோழியை முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கிறார்கள்.
- கோழிகள் பெருமளவில் வளர்க்கப்படும் இடம் கோழிப்பண்ணை ஆகும்.
- கோழி முட்டை நல்ல சத்துள்ள உணவாகும்.

# 12. பசு



- ❒ பசு ஒரு வீட்டு மிருகம்.
- ❒ அது சாதுவான மிருகம்.
- ❒ பசு பால் தரும்.
- ❒ பசு கன்று ஈனும்.
- ❒ பசுவை இந்துக்கள் தெய்வமாக வணங்குவர்.
- ❒ பசுவுக்கு நான்கு கால்கள் உண்டு.
- ❒ பசுவின் வால் நீளமாக இருக்கும்.
- ❒ பசு, புல் வைக்கோல் என்பனவற்றைத் தின்னும்.

# 13. ஆடு




- ❒ ஆடு ஒரு வீட்டு மிருகமாகும்.
- ❒ ஆட்டின் காது நீளமாக இருக்கும்.
- ❒ ஆடு இலை குழைகளை உண்ணும்.
- ❒ ஆட்டுப்பால் மிகவும் சத்தானது.
- ❒ ஆடு குட்டி போடும்.
- ❒ ஆடு மே...மே என்று கத்தும்.

# 14. கிளி




- கிளி ஓர் அழகான பறவை.
- கிளி பச்சை நிறம் உடையது.
- கிளியின் சொண்டு சிவப்பு நிறமாக இருக்கும்.
- கிளியைச் சிலர் கூண்டில் அடைத்து வீட்டில் வளர்ப்பர்.
- கிளிக்குப் பேசப் பழக்கினால் பேசும்.
- கிளி பழங்களை விரும்பி உண்ணும்.
- கிளி மரப் பொந்துகளில் வசிக்கும்.
- கிளி கீக்கீ என்று கத்தும்.

# 15. காகம்




- காகம் ஒரு பறவை.
- அது கருமை நிறம் உடையது.
- காகம் மரங்களில் கூடு கட்டி வசிக்கும்.
- காகங்களில் அரிசிக்காகம், அண்டங்காகம் என இரு வகை உண்டு.
- காகம் கா...கா என்று கரையும்.
- காகம் பூச்சி, புழுக்கள், கனிகள், தானியங்கள் முதலியவற்றை உண்ணும்.
- காகம் உணவை உண்ணும்போது தன் இனத்தையும் அழைத்து உண்ணும்.
- காகத்தை 'ஆகாயத் தோட்டி' என்றும் கூறுவர்.

# 16. நாய்



- ❒ நாய் நன்றி உள்ள மிருகம்.
- ❒ நாய் வீட்டைக் காவல் புரியும்.
- ❒ பழகியவர்களைக் கண்டால் அது வாலை ஆட்டும்.
- ❒ பழகாதவர்களைக் கண்டால் அது குரைக்கும்.
- ❒ நாய் வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்களில் ஒன்றாகும்.
- ❒ நாய் மாமிச உணவுகளை விரும்பி உண்ணும்.

# 17. வண்ணத்துப்பூச்சி




- ❒ வண்ணத்துப்பூச்சி ஒரு சிறிய உயிரினமாகும்.
- ❒ வண்ணத்துப்பூச்சியின் உடல் மிகவும் மென்மையாக இருக்கும்.
- ❒ வண்ணத்துப்பூச்சி மிகவும் அழகானது.
- ❒ வண்ணத்துப்பூச்சியின் உடலில் பல வர்ணங்கள் காணப்படும்.
- ❒ வண்ணத்துப்பூச்சி பூக்களைத் தேடிப் பறந்து செல்லும்.
- ❒ இது பூக்களில் உள்ள தேனை உறிஞ்சிக் குடிக்கும்.

# 18. மயில்



- ❐ மயில் அழகான பறவை.
- ❐ அது காடுகளில் வசிக்கும்.
- ❐ அதன் கால்கள் நீளமானவை.
- ❐ ஆண் மயிலுக்குத் தோகை உண்டு.
- ❐ அது தோகை விரித்து ஆடும்.
- ❐ மயில் தானியங்கள், பூச்சி புழுக்கள் என்பனவற்றை உண்ணும்.
- ❐ சில கோயில்களில் மயில்களைக் காணலாம்.

# 19. யானை



- யானை காட்டில் வாழும்.
- யானை மற்றைய மிருகங்களிலும் பெரியது.
- யானை மிகவும் வலிமையுள்ள மிருகம்.
- பெரிய மரங்களையும் அது தள்ளி விழுத்தும்.
- அதன் கண்கள் மிகவும் சிறியவை.
- அதன் காதுகள் சுளகு போல் அகன்று இருக்கும்.
- யானைக்குத் தும்பிக்கை உண்டு.
- தும்பிக்கை மிகவும் நீளமானது.
- யானை தும்பிக்கையால் நீரை உறிஞ்சும்.
- உறிஞ்சிய நீரை வாயில் விட்டுக் குடிக்கும்.
- தந்தங்கள் உள்ள யானையைக் கொம்பன் என்பார்கள்.
- யானையின் தந்தம் மிகவும் பெறுமதியானது.
- சிலர் யானையை விரும்பி வளர்க்கிறார்கள்.
- யானை பாரமான பொருட்களையும் மரங்களையும் தூக்கிச் செல்லும்.

# 20. மழை



- மழை இயற்கையின் கொடையாகும்.
- மழை பெய்தால் மண் குளிரும்.
- மரங்களும் பயிர்களும் செழித்து வளரும்.
- மழை தொடர்ந்து பெய்தால் வெள்ளப் பெருக்கு ஏற்படும்.
- மழை பெய்யாவிட்டால் வறட்சி ஏற்படும்.
- வறட்சி ஏற்பட்டால் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும்.
- சிறுவர்கள் மழை நீரில் காகிதக் கப்பல் விட்டு மகிழ்வார்கள்.
- மழை இல்லாவிடில் பசும் புல்லைக்கூட நாம் காணமுடியாது.

# 21. பூக்கள்




- பூக்கள் மிகவும் அழகானவை.
- பூக்கள் நல்ல வாசனை கொண்டவை.
- பூக்களை எல்லோரும் விரும்புவர்.
- பூக்கள் பல நிறங்கள் கொண்டவை.
- பூக்களைக் கொண்டு மாலை கட்டலாம்.
- பூக்கள் கோயில்களில் பூசைக்குப் பயன்படுகின்றன.

# 22. மரங்கள்



- மரங்கள் மண்ணுக்கு மிகவும் பயனுள்ளவை.
- மரங்களிலிருந்து பூ, பழம் என்பன பெறலாம்.
- பெரிய மரங்கள் நிழல் தரும்.
- மரங்களை வெட்டி அழிக்கக்கூடாது.
- மரங்கள் நடுவது நமது கடமையாகும்.
- மரங்கள் மண்ணரிப்பைத் தடுக்க உதவுகின்றன.

# 23. பழங்கள்



- பழங்கள் சத்து மிக்க உணவாகும்.
- பழங்களை உண்பதன் முன் அவற்றை நன்கு கழுவுதல் வேண்டும்.
- உணவுக்குப் பின் பழங்கள் சாப்பிடுவது நல்ல பழக்கமாகும்.
- பழங்கள் உண்பதால் நோய்கள் வராமல் தடுக்கலாம்.
- பழங்களிலிருந்து பழச்சாறு செய்யலாம்.
- மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் என்பன முக்கனிகள் எனப்படும்.

# 24. வீட்டுத்தோட்டம்



- எமது வீட்டுத்தோட்டம் பெரியது.
- அதில் அழகான பூ மரங்கள் உள்ளன.
- அவை உரிய காலத்தில் பூத்து அழகாக இருக்கும்.
- எமது வீட்டுத்தோட்டத்தில் காய்கறிகளும் பயிரிட்டுள்ளோம்.
- நாம் தினமும் பயிர்களுக்கு நீர் ஊற்றுவோம்.
- வீட்டுத் தோட்டத்தில் இருந்து காய்கறிகளைப் பெறுகின்றோம்.

# 25. செய்தித்தாள்




- செய்தித்தாள்களில் பல்வேறு செய்திகள் உண்டு.
- செய்திகள் படங்களுடன் காணப்படும்.
- உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளைச் செய்தித்தாள்கள் மூலம் உடனடியாக அறிந்து கொள்ளலாம்.
- செய்தித்தாள் எழுத்து வடிவிலான ஊடகமாகும்.
- செய்தித்தாள்கள் தினசரி வெளிவரும்.
- அறிவை வளர்த்துக் கொள்ளவும் செய்திகளை அறியவும் அவை உதவுகின்றன.

# 26. வானொலி



- வானொலி ஒரு தொடர்பு சாதனமாகும்.
- மார்க்கோனி என்பவர் வானொலியைக் கண்டுபிடித்தார்.
- வானொலியில் பாடல்கள், சொற்பொழிவுகள், செய்திகள் என்பனவற்றைக் கேட்கலாம்.
- வானொலி எல்லாச் செய்திகளையும் உடனுக்குடன் தருகின்றது.
- பெரும்பாலான வீடுகளில் வானொலி உண்டு.

# 27. தொலைக்காட்சி



- ❒ தொலைக்காட்சி ஒரு தொடர்பு சாதனமாகும்.
- ❒ தொலைக்காட்சியில் எல்லா நிகழ்ச்சிகளையும் நேரில் பார்ப்பதுபோல் பார்க்கலாம்.
- ❒ கல்வி நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பயன் பெறலாம்.
- ❒ தொலைக்காட்சியில் நாம் நல்ல நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்க வேண்டும்.
- ❒ தொலைக்காட்சியை அருகில் இருந்து பார்க்கக்கூடாது என்பர்.
- ❒ தொடர்ந்து தொலைக்காட்சி பார்த்தால் கண்கள் பாதிக்கப்படும் எனக் கூறுகின்றனர்.

# 28. பள்ளி செல்வோம்



- நாம் பள்ளி தினமும் செல்வோம்.
- நாம் பாடம் நன்கு கற்போம்.
- கல்வி என்பது பெரும் செல்வம்.
- அது கண்ணைப் போல உதவிடும்.
- நல்ல நல்ல நூல்களைத் தேடி நாங்கள் படிப்போம்.

# 29. உடற்பயிற்சி



- உடற்பயிற்சி செய்வதால் உடல் வலிமை பெறும்.
- உடல் நலத்தைப் பேண உடற்பயிற்சி அவசியம்.
- காலையில் உடற்பயிற்சி செய்வது நல்லது.
- உடல் நலம் உள்ளவர்களே மகிழ்ச்சியாய் வாழ்வர்.
- நாம் தினந்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

# 30. சுப்பிரமணிய பாரதியார்



- சுப்பிரமணிய பாரதியார் சிறந்த கவிஞர்.
- அவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.
- பாரதியார் பாப்பாப் பாட்டுப் பாடித் தந்துள்ளார்.
- பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார்.
- அவரது தந்தை பெயர் சின்னச்சாமி ஐயர்.
- தாயார் பெயர் இலக்குமி அம்மாள்.
- பாரதியாரின் பாடல்களை நாங்களும் பாடுவோம்.

# 31. திருக்குறள்



- திருக்குறள் மிகச் சிறந்த நூலாகும்.
- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
- திருக்குறள் யாவருக்கும் பொதுவானது.
- இதனால் இதனைப் பொதுமறை என்பர்.
- திருக்குறளில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன.
- ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்கள் உண்டு.
- மக்களுக்கு நல்ல பல கருத்துக்களை இந்நூல் கூறுகிறது.

# 32. ஔவைப்பாட்டி



- ஔவையார் ஒரு பெண் புலவர்.
- அவரை ஔவைப்பாட்டி என்று அழைப்பர்.
- ஔவைப்பாட்டி தமிழ் அறிந்த பாட்டி.
- அவர் ஆத்திசூடி பாடிய பாட்டி.
- அவரது பாடல்கள் அருமையானவை.
- ஔவைப்பாட்டி நீதி சொன்ன பாட்டி.
- அவரது பாடல்கள் நமது சொத்தாகும்.
- ஔவையாரது பாடல்களை நாங்கள் விரும்பிப் படிப்போம்.

# 33. சுத்தம் பேணுவோம்



- ❒ சுத்தம் சுகம் தரும் என்பது பழமொழி.
- ❒ நாம் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும்.
- ❒ சுத்தமான உணவுகளையே உண்ண வேண்டும்.
- ❒ தூய்மையான ஆடைகளை அணிய வேண்டும்.
- ❒ குப்பை கூழங்களை அகற்றிச் சுத்தப்படுத்த வேண்டும்.
- ❒ சுத்தமாக இருந்தால் நோய்கள் ஏற்படாது.

# 34. பழமொழிகள்



- பழமொழிகள் சிறந்த கருத்துள்ளவை.
- அவை நம்முன்னோரின் வாழ்க்கை அனுபவ மொழியாகும்.
- நீதியைக் கூறும் பழமொழிகள் பல உள்ளன.
- பழமொழிகளுக்கு எழுதா இலக்கியம் என்ற பெயரும் உண்டு.
- ஒவ்வொரு மொழியிலும் பழமொழிகள் உள்ளன.
- பழையமொழி, பழகிப்போன மொழி, பழமொழி என்று கூறுவர்.
- பழமொழிகளை எல்லோரும் விரும்புவர்.
- பழமொழிகள் ஒழுங்கான வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன.

# 35. வாழை (சுயசரிதை)



- என் பெயர் வாழை.
- நான் கதலி இனத்தைச் சேர்ந்தவன்.
- நான் செழிப்பான செம்மண் தோட்டத்தில் பிறந்தேன்.
- எனது தோட்டக்காரர் நல்லவர்.
- அவர் எனக்கு நல்ல பசளையிட்டார்.
- தினமும் எனக்கு நீர்ப்பாய்ச்சினார்.
- இதனால் நான் செழித்து வளர்ந்தேன்.
- பசுமையான இலைகளுடன் பத்தடி உயரம் வரை வளர்ந்திருந்தேன்.
- பின்னர் பொத்தி ஈன்று பெரிய குலை தள்ளினேன்.
- என்ன கொடுமை! நாரும் இலையும் பொத்தியும் தந்த நான் குலைக்காக வெட்டிச் சரிக்கப்பட்டேன்.
- நான் இறந்தாலும் என் இனம் தொடர்ந்து மக்களுக்கு உதவிக் கொண்டே இருக்கும்.
- வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டே இருப்போம்.



# 36. சுவாமி விபுலாநந்தர்

- ❒ சுவாமி விபுலாநந்தர் ஒரு துறவி.
- ❒ இவரது இயற்பெயர் மயில்வாகனன்.
- ❒ இவர் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து துறவி ஆனார்.
- ❒ துறவியானபோதே விபுலாநந்தர் என்ற பெயரைப் பெற்றார்.
- ❒ விபுலாநந்தர் மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்தவர்.
- ❒ இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி.
- ❒ இவரது தாயார் பெயர் கண்ணம்மை.
- ❒ விபுலாநந்தர் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் புலமை பெற்றவர்.
- ❒ இயல், இசை, நாடகம் மூன்றிலும் வல்லவர்.
- ❒ இதனால் இவரை முத்தமிழ் வித்தகர் என்று போற்றுகிறோம்.
- ❒ விபுலாநந்தர் பல நூல்களை எழுதியுள்ளார்.
- ❒ அவற்றுள் யாழ் நூல் மிகவும் சிறந்தது.
- ❒ அவர் பல கவிதைகளையும் இயற்றியுள்ளார்.

# 37. நத்தார்ப் பண்டிகை




- ❒ நத்தார்ப் பண்டிகை கிறித்தவர்களின் முக்கிய பெருநாளாகும்.
- ❒ வருடந்தோறும் டிசம்பர் மாதம் இருபத்தைந்தாம் திகதி இப்பண்டிகை கொண்டாடப்படும்.
- ❒ இது கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் நாளாகும்.
- ❒ கிறிஸ்மஸ் தினம் எனவும் இதனை அழைப்பர்.
- ❒ இத்தினத்தில் தேவாலயங்களில் விசேட பிரார்த்தனைகள் நடைபெறும்.
- ❒ கிறித்தவர்கள் இப்பிரார்த்தனைகளில் கலந்து கொள்வர்.
- ❒ தங்கள் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக் கூறுவார்கள்.

# 38. நீர்



- நீர் இன்றி நாம் உயிர் வாழ முடியாது.
- நீர் மிகவும் பெறுமதி வாய்ந்தது.
- உயிர் இனங்கள் அனைத்துக்கும் நீர் இன்றியமையாதது.
- நாம் தினமும் நீரைப் பருகுகிறோம்.
- நமது அன்றாடத் தேவைகளுக்கு நீரைப் பயன்படுத்துகிறோம்.
- உடலைச் சுத்தம் செய்யவும், உணவு சமைக்கவும் நீர் பயன்படுகிறது.
- விவசாயம் செய்வதற்கும் நீர் வேண்டும்.
- மழை, கிணறு, ஆறு, குளம் என்பவற்றின் மூலம் நாம் நீரைப் பெறுகிறோம்.
- சுத்தமான நீரையே நாம் பருகவேண்டும்.
- நீரை வீண் விரயம் செய்யக் கூடாது.



நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

# 39. சோமசுந்தரப்புலவர்


- ❒ ஈழநாட்டில் தோன்றிய புலவர்களுள் சோமசுந்தரப் புலவரும் ஒருவர்.
- ❒ இவர் நவாலி ஊரில் வாழ்ந்தார்.
- ❒ இவரைத் தங்கத்தாத்தா என்று அழைப்பர்.
- ❒ இவர் குழந்தைகளுக்காகப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.
- ❒ இவரது தந்தையார் பெயர் கதிர்காமர்.
- ❒ இவரது தாயாரின் பெயர் இலக்குமிப்பிள்ளை.
- ❒ சோமசுந்தரப்புலவர் நாற்பது ஆண்டு காலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- ❒ இவரது பாடல்கள் மிகவும் இனிமை வாய்ந்தவை.
- ❒ சோமசுந்தரப் புலவரது பாடல்களை நாங்கள் விரும்பிப் படிப்போம்.
- ❒ ஆடிப்பிறப்பு, கத்தரித் தோட்டத்து வெருளி, பவளக்கொடி, கொழுக்கட்டைப் பொன்னன் போன்ற பாடல்கள் மறக்க முடியாதவை.

# 41. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்



- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஔவையார் வாக்கு.
- தாயும் தந்தையுமே நாம் முதலில் அறிந்து வணங்குதற்கு உரிய தெய்வங்கள் ஆவர்.
- நம்மைப் பெற்று வளர்ப்பவர்கள் தாய், தந்தையரே ஆவர்.
- பெற்றோர் நமக்கு நல்லவைகளையே செய்கிறார்கள்.
- வயது முதிர்ந்த காலத்தில் நாம் பெற்றோரைப் பேணிக் காத்தல் வேண்டும்.
- பெற்றோர் சொற்கேட்டு நடத்தல் நன்மை தரும்.

# 41. தியாகத்திருநாள்



- ஹஜ்ஜுப் பெருநாள் தியாகத் திருநாளாகும்.
- இஸ்லாமிய மக்கள் கொண்டாடும் பண்டிகை இதுவாகும்.
- இதனை பக்ரீத் பண்டிகை என்றும் அழைப்பர்.
- இறைவனுக்காக எந்தத் தியாகத்தைச் செய்யவும் தயார் என்பதை இது நினைவூட்டுகிறது.
- இப்பெருநாள் இஸ்லாமிய ஆண்டின் இறுதி மாதமான துல்ஹஜ் மாதம் பத்தாம் நாள் கொண்டாடப்படுகிறது.
- இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமை இம்மாதத்தில் தான் நிறைவேற்றப்படுகிறது.
- இந்நன்னாளை இஸ்லாமியர்கள் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.
- ஏழைகளுக்கும் அயலார்களுக்கும் உணவளித்து மகிழ்வார்கள்.



தவத்திரு ஆறுமுகநாவலர் அவர்கள்

# 42. ஆறுமுகநாவலர்

- ஆறுமுகநாவலர் ஒரு பெரியார்.
- இவர் சைவமும் தமிழும் வளரப் பணி செய்தவர்.
- ஆறுமுகநாவலர் தந்தை பெயர் கந்தப்பிள்ளை.
- இவரது தாயார் பெயர் சிவகாமி.
- ஆறுமுகநாவலர் நல்லூரில் வாழ்ந்தார்.
- இவரது இயற்பெயர் ஆறுமுகம் என்பதாகும்.
- திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு நாவலர் என்னும் பட்டத்தை வழங்கியது.
- இதன் பின்னர் இவரை ஆறுமுகநாவலர் என அழைத்தனர்.
- ஆறுமுகநாவலர் பல நூல்கள் எழுதியுள்ளார்.
- இவர் பல அரிய நூல்களைப் பதிப்பித்துள்ளார்.
- பல சைவப்பாடசாலைகளை உருவாக்கியுள்ளார்.
- கோவில்களில் சமயப் பிரசங்கங்கள் நிகழ வழிகாட்டினார்.
- ஆறுமுகநாவலரை இலங்கை அரசு தேசிய வீரராகப் போற்றுகிறது.
- இவரது நினைவாக முத்திரை வெளியிட்டுள்ளது.

# 43. வீதி விதிகள்

- வீதியிற் செல்வோர் வீதி விதிகளைப் பின்பற்ற வேண்டும்.
- வீதி விதிகளைப் பின்பற்றாமையால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன.
- நடந்து செல்வோர் நடைபாதையிற் செல்ல வேண்டும்.
- வீதியைக் கடக்க விரும்பின் கடக்கும் இடத்தில் கடக்க வேண்டும்.
- வீதியின் குறுக்கே செல்லுதல் கூடாது.
- வீதியில் நின்று விளையாடுதல் கூடாது.
- வீதியில் பலர் ஒன்று சேர்ந்து கதைத்துக் கொண்டு செல்லுதல் கூடாது.
- வீதியில் செல்லும் போது வலது பக்கத்தால் நடந்து செல்ல வேண்டும்.
- பெரிய வீதிகளில் பாதையைக் கடப்பதற்கு சமிக்ஞை நிற ஒளிகாட்டி உதவுகிறது.
- சமிக்ஞை நிற ஒளியை அவதானித்து அதற்கமையப் பாதைகளைக் கடத்தல் வேண்டும்.

# 44. மின்னுவதெல்லாம் பொன் அல்ல.

- மின்னுவது எல்லாம் பொன் அல்ல என்பது பழமொழி.
- பகட்டைக் கண்டு நாம் ஏமாறக் கூடாது என்பதே இதன் கருத்தாகும்.
- பலர் பகட்டைக் கண்டு ஏமாறுகிறார்கள்.
- ஒருவனது தோற்றத்தை மட்டும் வைத்துக் கொண்டு முடிவுகளுக்கு வந்துவிடக் கூடாது.
- தோற்றத்துக்குப் பின்னே உள்ள குணங்களை வைத்துத் தான் முடிவு செய்ய வேண்டும்.
- அவசரப்பட்டு முடிவுகளுக்கு வராமல் நன்கு சிந்தித்துச் சரியான முடிவுகளுக்கு வரவேண்டும்.
- இதனையே இப்பழமொழி நமக்கு உணர்த்துகிறது.

கடிதம் எழுதுவோம்.

# 45. உறவு முறைக்கடிதம்

'அழகாபுரி'
51, அண்ணா வீதி,
வாழைச்சேனை.
20.12.2003.

அன்புள்ள தங்கைக்கு,

இவ்விடம் நான் நலமுடன் உள்ளேன். அவ்விடம் தங்கள் அனைவரதும் நலம் அறிய ஆவலாக உள்ளேன்.

நான் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அவ்விடம் வருவதற்கு எண்ணியுள்ளேன். வரும்போது நீங்கள் கேட்டுள்ள பொருட்களை மறவாது வாங்கி வருவேன்.

அடுத்த ஆண்டு நீங்கள் நான்காந் தரத்துக்கு வகுப்பேற்றம் பெற்றுள்ளமை குறித்து மகிழ்கிறேன். இப்பொழுதிருந்தே பாடங்களை நன்கு படியுங்கள். அம்மா, அப்பா, அக்கா அனைவருடனும் அன்பாகப் பழகு. அதிகாலையில் எழுந்து படிப்பது நல்லது. பாடப் புத்தகங்களைப் படிப்பதோடு நின்று விடாதே. நூல்நிலையத்தில் உள்ள சிறுவர் நூல்களையும் வாங்கிப்படி. வாசிப்பு மனிதனைப் பூரண மனிதனாக்கும் என்ற பொன்மொழியை மறவாதே. பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் கூறும் அறிவுரைகளின்படி நடந்து கொள். பெற்றோர், பெரியோரை மதித்து நட. எனது அறிவுரைகளை மனதிற் கொண்டு சீராக நடக்கப் பழகிக்கொள்.

பிற யாவும் நேரில்.

இப்படிக்கு,
அன்பு அண்ணா,
த. அன்பரசன்.

# 46. சுற்றுலா



- ☐ சுற்றுலா மகிழ்ச்சி தரும் பயணமாகும்.
- ☐ புதிய புதிய இடங்களுக்குச் செல்லலாம்.
- ☐ சுற்றுலாவின் மூலம் புதிய செய்திகளை அறிந்து கொள்ளலாம்.
- ☐ பொது அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.
- ☐ விடுப்பு (லீவு - leave) நாட்களை நல்ல முறையில் பயன்படுத்தலாம்.
- ☐ இயற்கை அழகைப் பார்த்து இரசிக்கலாம்.
- ☐ இனிய சூழலை உணரலாம்.


# 47. கலாநிதி டி. பி. ஜாயா



- நமது நாட்டுப் பெரியார்களுள் கலாநிதி டி. பி. ஜாயா குறிப்பிடத் தக்கவர்.
- இவர் கண்டி மாவட்டத்தில் உள்ள கலகெதர என்னும் ஊரில் பிறந்தவர்.
- இவரது முழுப்பெயர் துவான் புர்ஹாறுத்தீன் ஜாயா என்பதாகும்.
- ஜாயா தமது ஆரம்பக்கல்வியை கொடகேன எஸ்.பி.ஜீ வித்தியாலயத்தில் பெற்றார்.
- இலண்டன் பல்கலைக்கழகத்தில் பீ.ஏ. பட்டம் பெற்றார்.
- கண்டி தர்மராஜ வித்தியாலயத்திலும், கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.
- கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக விளங்கினார்.
- முஸ்லிம் மக்களின் நலன் கருதி அரசியலில் ஈடுபட்டு உழைத்தார்.
- சட்டசபை, அரசாங்கசபை ஆகியவற்றில் உறுப்பினராக இருந்தார்.
- தொழில் அமைச்சராகவும் பணியாற்றினார்.
- இவரது சேவைகளை இலங்கை முஸ்லீம்கள் பெரிதும் போற்றினர்.

கதை படிப்போம்


## 48. நண்டின் ஆசை



ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தது ஒரு நண்டு. எப்படியாவது மேலே பறக்க வேண்டும் என்று விரும்பியது. கொக்கு ஒன்று மேலே பறந்து வருவதைக் கண்டது. உடனே கொக்கை அழைத்தது. 'கொக்காரே! என்னையும் தூக்கிக் கொண்டு செல். நான் உன்னோடு பறக்க விரும்புகிறேன்' என்றது.

கொக்கு நண்டைத் தூக்கியபடி பறந்து சென்றது. மேடான இடம் ஒன்றை அடைந்தது. அங்கே நண்டைத் தனது இரையாக்கிக் கொண்டது.

விபரீத ஆசை வினையாக முடிந்தது.




# 49. தாடி அறுந்த வேடன்

திசகாமி ஒரு வேடன். அவன் விந்தனைக் காட்டில் வாழ்ந்து வந்தான். அவன் நல்ல பலசாலி. அவனுக்கு நீண்ட தாடி இருந்தது. அவன் ஒரு நாயை வளர்த்தான். அந்த நாயின் பெயர் வீமா. அது காட்டில் உள்ள மான், மரை, முயல்களை வேட்டையாடுதற்கு உதவி புரியும்.

ஒரு நாள் திசகாமி அணில் வேட்டைக்குப் போனான். அவனுக்கு உதவியாக வீமாவும் போனது. அணில் ஒன்றைத் துரத்திச் சென்றான் திசகாமி. அணில் ஒரு மரப்பொந்தைச் சுற்றிச் சுற்றி ஓடியது. வீமா அதனைத் துரத்தியது. திசகாமி ஒரு பக்கமாகவும் வீமா மறுபக்கமாகவும் அணிலைத் துரத்தினர். அணில் மரத்தில் இருந்த பொந்து ஒன்றுக்குள் புகுந்து விட்டது. வீமா அதனைக் காணவில்லை. அது தொடர்ந்து மரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. அணில் என்று திசகாமியின் தாடியைப் பிடித்துக் கொண்டது. 'தாடியை விடு வீமா, விடுவீமா' என்று திசகாமி பலமுறை கூறினான். ஆனால் வீமா விடவில்லை. தாடியைப் பலமாக இழுத்தது. திசகாமியின் தாடி அறுந்தது. அணில் வேட்டைக்குப் போய் தாடி அறுந்த வேடன் மிக்க துக்கத்துடன் திரும்பினான்.

# 50. உண்மையான கருணை



ஒரு காட்டில் சில குரங்குகள் வாழ்ந்து வந்தன. அவை மரத்துக்கு மரம் தாவி மகிழ்ந்தன. மகிழ்ந்த குரங்குகள் ஒரு வேடனைக் கண்டன. கண்டவுடன் பயந்து ஓடின. ஓடியவை அருகில் இருந்த குளத்தில் பாய்ந்தன. பாய்ந்த குரங்குகள் நீரில் நீந்த முடியாது தவித்தன. தவித்த குரங்குகளை ஒரு முதலை கண்டது. பாவம் குரங்குகள் என்று எண்ணியது. அவற்றின் மீது இரக்கம் கொண்டது.

இரக்கம் கொண்ட முதலை அவற்றைத் தன் முதுகின் மேல் ஏற்றியது. சுமந்து சென்று கரையில் விட்டது. முதலையின் உதவிக்கு குரங்குகள் நன்றி கூறின.

ஆபத்து வேளையில் உதவுவதே உண்மையான கருணையாகும்.

# பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
(முகம் ஒரு கண்ணாடி)
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
(ஒற்றுமையே பலம்)
3. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
(விடாமுயற்சி பலன் தரும்)
4. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
(விடாமுயற்சி)
5. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
(அளவை மீறுதல் ஆகாது)
6. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்.
(பதட்டங் கூடாது)
7. ஆழம் அறியாமல் காலை விடாதே.
(ஆராய்ந்து செய்)
8. ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு.
(மரணத்துக்குக் கால எல்லை இல்லை)
9. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
(இளமையின் சிறப்பு)
10. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
(வறுமையிலும் செம்மையாக வாழ்தல் வேண்டும்)
11. உண்மை சொல்லிக் கெட்டவர் இல்லை.
(உண்மை உயர்வு தரும்)

12. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
(நன்றி மறக்காதே)

13. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
(தகுதிக்குமேல் எண்ணாதே)

14. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு.
(வீண்பெருமை)

15. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
(இளமையிற் செய்)

16. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
(ஒற்றுமை)

17. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
(நம்பிக்கை காக்கும்)

18. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
(வறுமையிலும் செம்மையாக வாழப் பழகிக்கொள்)

19. கல் எல்லாம் மாணிக்கக் கல் ஆகுமா?
(நல்லவை சில)

20. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
(காலத்தைத் தவறவிடாதே)

21. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
(தன்னுடையது பெரிது)

22. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை.
(அதிட்டக்குறைவு)

23. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.
(பயிற்சியின் பயன்)

24. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்.
(பிழையான பிடிவாதம்)

25. துட்டரைக் கண்டால் தூர விலகு.
(தீமைக்கு விலகு)

26. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
(பழக்கத்தின் வலிமை)

27. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
(துன்பத்தின் கொடுமையும் இன்பத்தின் அருமையும்)

28. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
(சுகமே செல்வம்)

29. பணமில்லாதவன் பிணம்.
(பணத்தின் அருமை)

30. பானையில் இருந்தால் அகப்பையில் வரும்.
(உள்ளதுதான் வரும்)

31. புத்திமான் பலவான்.
(புத்தியே பலம்)

32. பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு.
(தாய்ப் பாசம்)

33. பொறுத்தார் அரசாள்வார்.
(பொறுமையின் உயர்வு)

34. மனமுண்டானால் இடமுண்டு.
(விருப்பமே வெற்றி)

35. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
(பெரியோர் வாக்கின் பெருமதி)

# விடுகதைகள்

1. அக்காள் விதைத்த முத்து; அள்ளமுடியாத முத்து. - அது என்ன?
2. அட்டைக்கரிப் பெண்ணுக்கு உச்சந்தலை மஞ்சள். - அது என்ன?
3. அடங்கிக் கிடப்பான். எடுத்துக் காதில் வைத்தால் கதை ஆயிரம் அளப்பான். - அவன் யார்?
4. அடி காட்டில்; நடு மாட்டில்; நுனி வீட்டில் - அது என்ன?
5. ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி - அது என்ன?
6. ஆட்டிவிட்டால் ஆடுவது அந்தரத்தில் தொங்குவது - அது என்ன?
7. ஆடு மேய்கிறது; கறி வேகிறது; தோல் காய்கிறது - அது என்ன?
8. ஆனை விரும்பும் சேனை விரும்பும் அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும். - அது என்ன?
9. இணைபிரியமாட்டார்கள், நண்பர்கள் அல்ல; ஒன்றுசேர மாட்டார்கள் பகைவர்கள் அல்ல. - அவர்கள் யார்?
10. இந்த ஊரில் அடிபட்டவன் அடுத்த ஊரில் போய்ச் சொல்கிறான். - அது என்ன?
11. இரவெல்லாம் பூங்காடு; பகலெல்லாம் வெறுங்காடு. அது என்ன?
12. உச்சாணிக் கொம்பிலே உரல் கட்டித் தொங்குது. அது என்ன?

13. உப்பினை உண்டவன் உறங்காமல் அலைகிறான். - அவன் யார்?

14. ஊசி போட்ட வைத்தியர் ஊமை போலப் போகிறார். - அது என்ன?

15. எட்டாத உயரத்தில் தொட்டில் கட்டி ஆடுது. - அது என்ன?

16. ஏறினால் வழுக்கும் இனிய கனி தரும், காயைத் தின்றால் துவர்க்கும். - அது என்ன?

17. ஒரு முழ மூங்கிலில் ஒய்யார கீதம். - அது என்ன?

18. ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை. - அது என்ன?

19. ஓடுமாம் குதிரை ஒளியுமாம் குதிரை தண்ணீரைக் கண்டால் தவிக்குமாம் குதிரை. - அது என்ன?

20. கடலிலே கலந்து கரையிலே பிரிந்து தெருவிலே திரியும் பூ என்ன பூ?

21. கால்கள் நான்கு நடக்காது; கண்கள் ஆயிரம் இமைக்காது. - அது என்ன?

22. காலைக்கடிக்கும் செருப்பல்ல; காவல் காக்கும் நாயல்ல. - அது என்ன?

23. கிளிகள் மூன்று நிறம். மூன்றும் கூட்டுக்குள் போனால் ஒரே நிறம். - அவை யாவை?

24. குடிக்கத் தண்ணீர் உண்டு; குளிக்கத் தண்ணீர் இல்லை. - அது என்ன?

25. கையுண்டு கால் இல்லை; கழுத்துண்டு தலை இல்லை. - அது என்ன?

26. கொளுத்திய பின்பு கோடிக் கும்பிடு. - அது என்ன?

27. சந்தையிலே கண்டேன்; கண்டதும் கொண்டேன்; கொண்டதும் பிளந்தேன்; பிளந்ததும் சிரித்தாள். - அவள் யார்?

28. சின்னக் கிணற்றில் கிண்ணத் தண்ணீர். - அது என்ன?

29. சின்னஞ்சிறு வீட்டில் சிப்பாய்கள் நூறு பேர். - அது என்ன?

30. செப்பு நிறைய மாணிக்கம். - அது என்ன?

## விடுகதைகளுக்கான விடைகள்:

| | | |
|---|---|---|
| 1. கோலம் | 2. பனங்காய் | 3. தொலைபேசி |
| 4. நெல் | 5. மழை | 6. ஊஞ்சல் |
| 7. முட்டை | 8. கரும்பு | |
| 9. புகைவண்டி தண்டவாளம் | | 10. தந்தி |
| 11. வானம் | 12. பலாப்பழம் | 13. கடல் |
| 14. முட்டைப்பூச்சி | 15. குருவிக்கூடு | 16. வாழை |
| 17. புல்லாங்குழல் | 18. மரம் | 19. நெருப்பு |
| 20. உப்பு | 21. கட்டில் | 22. முள் |
| 23. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு | | 24. தேங்காய் |
| 25. சட்டை | 26. கற்பூரம் | 27. தேங்காய் |
| 28. தேங்காய் | 29. தீப்பெட்டி,தீக்குச்சிகள் | |
| 30. மாதுளம்பழம் | | |

பதிவு இல. HA/7/56/14/178
முத்துமாரி அம்மன்

# விற்பனையாகின்றன !


















விற்பனையாளர் :

**லங்கா புத்தகசாலை**

F.L 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர

**கொழும்பு 12**

T.P. 2341942